




செஸ் உலக சேம்பியன்சிப் போட்டியில் சாதித்து தமிழ்நாட்டுக்கு பெருமை தேடித்தந்த பிரக்ஞானந்தா, குகேஷ் மற்றும் உலக பள்ளி செஸ் சேம்பியன்சில் சாதனை படைத்த சென்னை வேலம்மாள் பள்ளி மாணவ மாணவியருக்கு நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உலகக்கோப்பை செஸ் போட்டியில் இறுதிப்போட்டி வரை சென்ற பிரக்ஞானந்தா, இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரர் குகேஷ் உள்ளிட்ட செஸ் வீரர் வீராங்கனையருக்கு ரூ.60 லட்சத்தை பரிசுத்தொகையாக வழங்கினார். எளிய குடும்பத்தில் பிறந்து, தங்கள் திறமையால் தமிழ்நாட்டை உலக அரங்கில் தலைநிமிரச் செய்த பிரக்ஞானந்தா, குகேஷுக்கு வாழ்த்துகள் என்றும், இருவரின் சாதனைப் பயணம் தொடரட்டும் என்றும், உலகின் நம்பர் 1 செஸ் வீரர் ஆவதற்கான அவர்களது வேட்கை வெல்லட்டும் என்றும் குறிப்பிட்டார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### ஹிட்லர் போன்று சர்வாதிகாரியாக செயல்பட்டால்

# இந்தியா சுக்குநூறாகிவிடும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எச்சரிக்கை!

சென்னை, செப். 12-

ஹிட்லர் போன்று சர்வாதிகாரியாக செயல்பட்டால் இந்தியா சுக்குநூறாக நொறுங்கிவிடும் என்று கலைஞர் நூற்றாண்டு விழாவில் வைகோ பேசினார்.



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திரு.வி.க. நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் ஓட்டேரி ஐந்து விளக்கு பகுதியில், தெற்கு பகுதிச் செயலாளர் சாமிக்கண்ணு தலைமையில் 'தமிழன் உயர குரல் கொடுத்தவர், தாய்போல் கலைஞர் அரவணைத்தவர்' என்னும் பெயரில் நடந்த பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

இதில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வைகோ பேசியதாவது:

வடஇந்திய பகுதிகளில் ஆட்சி செய்தவர்கள் ஒருபோதும் தமிழ்நாட்டில் கால் வைத்ததில்லை, ஆனால் தமிழ்நாட்டு அரசர்கள் கங்கை வரை சென்று ஆட்சி செய்துள்ளனர். மலேசியா, தாய்லாந்து ஆகிய வெளிநாடுகளை கைப்பற்றி ஆட்சி செய்தவர்கள் சேர, சோழ, பாண்டியர்கள். பாரதம் என சனாதனத்தை நிலை நிறுத்தினால், இந்தியா துண்டு துண்டாகப் போய்விடும் என்பதை தற்போதுள்ள ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியா என்பது ஒரு நாடல்ல, அது மாநிலங்களால் இணைத்த ஒன்றியம். மாமன்னன் அசோகன் காலத்திலும் இந்தியா ஒன்றாக இல்லை. சக்கரவர்த்தி அக்பர் காலத்திலும் இந்தியா ஒன்றாக இல்லை. பிரிட்டிஷ் காலத்தில் பலதரப்பட்ட நிகழ்வுக்குப் பிறகு இந்தியாவை ஒன்றியமாக உருவாக்கினார்கள். இன்று பாரத் என்று சொல்ல ஆரம்பித்து ஹிட்லர், முசோலினி போன்று சர்வாதிகாரிகளாக இவர்கள் செயல்பட்டால் இந்தியா சுக்குநூறாக நொறுங்கிவிடும்.

இவ்வாறு வைகோ பேசினார்.

## பொத்தனூர் அ.தி.மு.க., பா.ஜ.க. நிர்வாகிகள் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

நாமக்கல் செப். 12

நாமக்கல் மேற்கு மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம் பொத்தனூர் பேரூர் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவை சேர்ந்த நிர்வாகிகள் பொத்தனூர் பேரூர் திமுக செயலாளர் கருணாநிதி ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கபிலர்மலை அ.தி.மு.க. ஒன்றிய மாணவரணி இணைச் செயலாளர் பிரபாகரன் தலைமையில் பொத்தனூர் இளைஞர் பாசறை மற்றும் அம்மா பேரவை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பாஜகவை சேர்ந்த நிர்வாகிகள் பிரகாஷ், ஹரிஷ், சூர்யா, பாண்டி, கிஷோர், ராஜாராம், உசேன், சங்கர் கார்த்தி, தினேஷ், திருநாவுக்கரசு, பாண்டி, ராஜகணபதி, சவுந்தர்ராஜன், துரைராஜ், மணிகண்டன், மோகன்ராஜ், குமார், வேல்முருகன் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

### மதத்தின் பெயரால்

# பகைமையை ஒன்றிய அரசே தூண்டி விடுகிறது!

## ப .சிதம்பரம் எம்.பி. குற்றச்சாட்டு!

சிவகங்கை. செப். 12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி.செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நடந்து முடிந்த பல்வேறு மாநில இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி நான்கு இடங்களில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இது வருகிற 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி பெறப்போகும் வெற்றிக்கு அச்சாரம் ஆகும்.



பா.ஜ.க .இந்தியா என்ற பெயரை விட்டு பாரத் என்று கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இந்தியா பாரத் இரண்டும் ஒன்று தான். எனவே இந்தியா என்பதை மறைக்க முடியாது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற முழக்கம் எழுப்பப்படுகிறது. அதை அவர்கள் எளிதாக கொண்டுவர முடியாது.

நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து அனைத்து மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டும். எனவே அது ஒன்றும் எளிதான காரியம் இல்லை. மக்களைதிசைதிருப்புவதற்காக இத்தகைய செயல்களில் பா.ஜ.க. ஈடுபடுகிறது.

ஜி 20 மாநாட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவர் கார்கேவிற்கு அழைப்பு தரப்படவில்லை. இது எதிர்க்கட்சிகளை பா.ஜ.க. நடத்தும் தவறான செயல்ஆகும்.

முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. நடத்திய இந்திய ஒற்றுமை பயணம் நாட்டில் பல்வேறு பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு இமாலய சாதனையாகும். இந்திய மக்களை குமரியில் இருந்து காஷ்மீர் வரை இதன் மூலம் இணைத்துள்ளார். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தி நடைபெற்ற பேரணியாகும். இதனால் இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள் மற்ற. சமூகத்தினர் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். பா.ஜ.க. வெறுப்புணர்வையும், பகைமையையும் வளர்த்து வருகிறது . இதை மக்கள் நன்றாக புரிந்து கொண்டுள்ளார்கள்.

பணபலம், அதிகார பலம், மூலமாக ஆட்சியை பிடித்து விடலாம் என்று பா.ஜ.க. நினைக்கிறது. அது முடியாது. அதை நாம் ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரை ஒரே மூச்சாக ஒற்றுமையுடன் பாடுபடுவோம்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

காரைக்குடி, சிவகங்கையில் ராகுல்காந்தி நடத்திய இந்திய ஒற்றுமை பேரணியின் ஓராண்டு நிறைவினை முன்னிட்டு பேரணி மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய்காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் ப.சிதம்பரம் எம்.பி. கார்த்தி, ப.சிதம்பரம் எம்.பி., எஸ். மாங்குடி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. வி.ராஜசேகரன், மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.ராஜரத்தினம், சண்முகநாதன், நகர் மன்ற உறுப்பினர் தி.விஜயகுமார் வீரகாளை மாநில மகளிர் காங்கிரஸ் துணைத் தலைவர் வித்யாகணபதி உட்பட நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டார்கள்.

